உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களி செயல்முறைகள்

பிறப்பிப்பவர் :- திரு.பெர்பெற்றி டெரன்ஸ் லியோன், எம்.எஸ்.சி

ந.க.எண். 35/2024/எப்1

நாள். 22 .02.2024.

பொருள் :- மனை உட்பிரிவு - உடுமலைப்பேட்டை நகராட்சி - நகரளவு வார்டு எண். G. பிளாக் எண். 3, நகரளவு எண். 15/8 -குடியிருப்பு உபயோகம் - மனை உட்பிரிவு உத்தரவு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :- 1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் ந.க.எண். PCJK6139/2023/TCP. நாள். 02.08.2023.

2. திரு. K. சின்னச்சாமி, உடுமலைபேட்டை என்பவரின் மனு நாள். 02.01.2024.

3. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் -2019.

i)திறந்த வெளிக்கட்டணம் ரூ.5,95,283/- E Challan Number. 2023072812686. நாள். 28.07.2023.

ii)நன்னிலை வரி ரூ.300/- E Challan Number.20240111060114 நாள். 11.01.2024 -

iii) கூர்ந்தாய்வுக் கட்டணம் ரூ.12632/- - இரசீது எண். 157/UMC/02/ 23-24/0018057. நாள். 18.01.2024.

iv) மனை உட்பிரிவுக் கட்டணம் ரூ.12632/- இரசீது எண். 157/UMC/02/ 23-24/0018057. நாள். 18.01.2024.

v) அபிவிருத்திக் கட்டணம் ரூ.7895/இரசீது எண். 157/ UMC /02/23-24/0018057. நாள். 18.01.2024.

4, உள்ளூர் திட்டக்குழும எண். 02, நாள். 22.02.2024.

பார்வையில் 1-ல் கண்டுள்ள உத்தரவில் உடுமலைப்பேட்டை நகராட்சி எல்கைக்குட்பட்ட சர்வே வார்டு ஜி, பிளாக் எண். 3, நகரளவு எண். 15/8-ல் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம் SWP/DTCP/TIRUPPUR / LAYOUT No. 228/2023. நாள். 02.08.2023-ல் அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனையிடத்திற்கான திறந்த வெளிக்கட்டணம், நன்னிலை வரி, கூர்ந்தாய்வு கட்டணம், மனை உட்பிரிவு கட்டணம் மற்றும் அபிவிருத்திக் கட்டணம் ஆகியவைகள் பார்வை 3ல் கண்டுள்ளபடி செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, நகரளவு வார்டு ஜி, பிளாக் எண். 3, நகரளவு எண். 15/8ல் 1 முதல் 8 வரையிலான குடியிருப்பு மனைகளை (SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO. 228/2023) வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின்படியும் மற்றும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி குடியிருப்பு உபயோகத்திற்கு மனை உட்பிரிவு ஒப்புதல் செய்து உத்திரவு வழங்கப்படுகிறது..

நிபந்தனைகள்

1. இம்மனை உட்பிரிவு உத்தரவு குடியிருப்பு உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
2. நகராட்சியின் அனுமதியின்றி உபயோக மாற்றம் ஏதும் செய்யக் கூடாது.
3. இந்த உத்தரவு மனையிடத்திற்கு மட்டுமே பொருந்தும்.

ஆணையாளர்
உடுமலைப்பேட்டை நகராட்சி

22/02/24.

பெறுநர்
திரு. K.சின்னசாமி,
த/பெ. கருப்பணன். -
கதவு எண். 31/70,
மனுநீதி சோழன் வீதி,
தங்கம்மாள் ஓடை,
உடுமலைப்பேட்டை,
திருப்பூர் மாவட்டம் – 642 126.